<u>**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**</u>

**O.S. No. 20/2009**

Deposition of P<u>.W. -1</u> witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. R.Kokilavani, Gr. III Bench clerk of this court, on 27.03.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : பழனியப்பன் Father's Name : ராமசாமி கவுண்டர்

ஆரம்ப நேரம்: 12.47 P.M

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

1. நான் இந்த வழக்கை இறந்துபோன வடிவேல் பிள்ளைக்கு எதிராகவும் தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அவருக்கு வாரிசுகள் உள்ளனர் என்றால் சரிதான். இறந்துபோன 4-ஆம் பிரதிவாதி ஆறுமுக கோனாருக்கும் வாரிசுகள் உள்ளனரா என்றால் உள்ளனர். இவ்வழக்கு பாதைக்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரிதான். தாவா பாதையை அகலப்படுத்த 4-ஆம் பிரதிவாதி அவரது நிலத்தில் இடம் ஒதுக்கியதாக எனது வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். முதலில் இவ்வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றாலும், தற்பொழுது விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. விளம்புகை பரிகாரம் கேட்டுள்ள இவ்வழக்கில் இறந்துபோன 2, 4 பிரதிவாதிகளின் வாரிசுகள் அவசிய தரப்பினர்கள் என்றாலும், அவர்கள் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்றாலும், 2, 4 பிரதிவாதிகள் இவ்வழக்கில் தோன்றா தரப்பினர்களாக இருந்துவருவதால் அவர்களது வாரிசுகளை சேர்க்கவில்லை. வா.சா.ஆ.2 ஆக 07.01.2009 தேதியிட்ட ஆறுமுக பிள்ளை என்பவர் குடும்பத்திடமிருந்து

தாவா பாதை குறித்து கிரயம் பெற்றதாக ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தின் அடிப்படையில் தாவா பாதையில் உரிமை உள்ளதாக விளம்புகை பரிகாரம் கோரப்படவில்லை என்றால் சரியல்ல, அதனடிப்படையில்தான் கேட்டுள்ளேன்.

3. வேறு எந்த ஆவணத்தின் அடிப்படையில் இவ்வழக்கில் நாங்கள் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் 1987-ஆம் ஆண்டு ஆறுமுக பிள்ளை என்பவரிடமிருந்து கிரயம் வாங்கிய ஆவணம் மற்றும் 2009-ஆம் ஆண்டு எழுதப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேன். நான் சொல்வதுபோல் மேற்கண்ட ஆவணங்களின் அடிப்படையில் இந்த வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரப்படவில்லை என்றாலும், நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. புல வரைபடத்தின் அளவுபடி தாவா பாதையானது 14 அடியாக இருந்த பொழுதிலும், உண்மையில் 9 அடி அகலத்தில்தான் பாதை இருந்து வருகிறது என்றால் சரியல்ல, தாவா பாதையானது 13 அடி அகலத்தில் இருந்து வருகிறது. நானும், எனது சகோதரர், எனது மகன் ஆகிய மூவரும் சேர்ந்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் மூலம் தாவா சொத்து பார்வையிடப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலத்திலிருந்து தற்பொழுது வரை தாவா பாதை ஒரே அளவில்தான் உள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தாவா பாதையின் அளவுகள் சரியானவைகள் என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு எங்கள் தரப்பில் எந்த ஆட்சேபனையும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பும் தாவா பாதை தற்பொழுது உள்ளவாறுதான் இருந்தது என்றால் சரிதான்.

5. UDR திட்டத்தின் கீழ் குறிக்கப்பட்ட அளவுகளின்படி தாவா பாதை இல்லை

என்றாலும், மேற்படி UDR திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட உட்பிரிவு நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும், UDR அளவுகள் படி உண்மையில் பாதை இல்லையென்றாலும் நான் தற்பொழுது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 1-ஆம் பிரதிவாதியின் தங்கவேல் மேற்படி தாவா பாதையை உட்பிரிவு செய்வதற்கு எழுத்துமூலமாக ஆவணம் எழுதிக் கொடுத்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

6. தாவா பாதையை தவிர மீதமுள்ள நிலங்கள் பிரதிவாதிகளுக்கு சொந்தமான விவசாய நிலங்கள் என்றால் சரிதான். 1-ஆம் பிரதிவாதியின் தந்தை கிரயம் வாங்கிய பொழுது தாவா பாதை உட்பட ஏக்.2.51 செண்ட் நிலத்தை கிரயம் வாங்கியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரய ஆவணத்தின்படி 1-ஆம் பிரதிவாதிக்கு ச.எண்.127/2B-ல் ஏக்.2.51 செண்ட் நிலம் பாத்தியப்பட்டுள்ள நிலையில் எனது நிரூபண வாக்குமூலத்தில் 1-ஆம் பிரதிவாதிக்கு ஏக்.2.38 செண்ட் நிலம் மட்டுமே சொந்தம் என்று எதனடிப்படையில் கூறியுள்ளேன் என்றால் ச.எண்.127/2B உட்பிரிவு செய்யப்பட்டு சஎண்.127/2A-ல் பாதைக்காக ஏக்.0.05 செண்ட் நிலம் எடுக்கப்பட்டது, தாவா சொத்தான ஏக்.0.07 செண்ட் நிலமானது ச.எண். 127/2B1 ல் அமைந்துள்ளது. எனவே 1-ஆம் பிரதிவாதிக்கு ஏக்.2.38 செண்ட் நிலம் மட்டுமே பாத்தியமாகும். நான் சொல்லும் உட்பிரிவுகள் தவறானது என்றாலும், மேற்படி உட்பிரிவுகள் நடைமுறைப்படுத்தப்பவில்லை என்றாலும் சரியல்ல.மேற்படி UDR உட்பிரிவுகள் 1, 5, 6 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

7. வழக்குரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளும், வழக்கில் கேட்கப்பட்டுள்ள பரிகாரமும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறான முரண்பாடான பரிகாரங்கள் கேட்கப்பட்டுள்ளதால் இவ்வழக்கில் எங்களுக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா பாதையில் எந்த உரிமையோ, அனுபவமோ வாதிகளுக்கு இல்லையென்றாலும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றாலும் சரியல்ல. தாவாவில் கேட்கப்பட்டுள்ள முதல் பரிகாரம்

சட்டத்திற்கு புறம்பானது என்றாலும், தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றாலும் சரியல்ல.

<u>வாதிகள் தரப்பு மறு விசாரணை</u>

1. நான் எந்த வருடம் எனது நிலத்தை கிரயம் பெற்றேன் என்றால் கடந்த 1987-ஆம் ஆண்டு கிரயம் பெற்றேன். UDR திட்டம் எப்பொழுது கொண்டு வரப்பட்டது என்றால் 1984-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. UDR க்கு பின்னிட்டு நான் கிரயம் பெற்றுள்ள நிலையில் கிரய ஆவணத்தில் UDR திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட உட்பிரிவுகள் குறிப்பிட்டு கிரயம் வாங்கப்படவில்லை என்றால் சரிதான்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 01.17 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.20/2009, Dt.27.03.2026.